(இ-ள்.):—இரங்கின் உயிர்வாழும் இல்லார் திறத்து இரக்கமில்லா ராதல் நன்றென்று உணர்ந்த நாடனிடத்துக்காட்டிலும் (யாறே !) நின்னிலைமை கொடியதாகும்; மலையில் உழுத மடமகள் இத்தகைய மென்சாயலினள் என்று கருதாயாய், மலை புற்கென்னும்படிவாழை (ஈர்த்துக்) கொணர்ந்தனை; (ஆதலின்.)—(எ-று.)

'மகள்உழுத' என்றது தமரோடு அவட்குள்ள ஒற்றுமையால்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## நெய்தல்.

[இது, வரைவிடை வேறுபடுங் கிழத்தியை அவர் வரையுநாள் அணித்தெனவும் அலரஞ்சலெனவுங் கூறியது.]

[பாணர் பாடியது.]

கூஉஅ. * சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
யலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசி னிரங்குந் துறைவ
னல்கிய நாடவச் சிலவே யலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோர் குறழுனிலை கண்ட
கலிகெழு குறும்பூ ரார்ப்பினும் பெரிதே.

(இ-ள்.):—கடல் முரசினைப்போல முழங்கும் துறைவன் கூடிய நாளில் உண்டான அலர் மிகவும் சிலவாயிருந்தனவோ? விச்சியர் கோன் வேந்தரொடு பொருதவன்று பாணர் (பாராட்டும்) 'குறழன்' என்பானது வலிநிலையைக் கண்டஅரணுள்ள ஊரிலுள்ளாரார்ப்பினும் பெரியதே.—(எ-று.)

அளை - வளை. அலவன் - நண்டு. குணில் - குறுந்தடி. தானை - படை.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

* இச்செய்யுளிற் கண்ட வரலாறு புலப்படவில்லை.